12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியது

# இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களின் மூல மதமே இந்துமதம்!

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,120 ஐப்பசி மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“செயல் ஆக்க ஊக்கப் பாராட்டுத் திருவோலை”** - குருதேவர் 28/07/1985இல் தமது மாணுக்கர் சித்தரடியான் திரு வெ.செகதீசன் அவர்களுக்கு எழுதிய கட்டுரை அஞ்சலின் நகல்.
2. **“செயல்விளக்கச் சித்தாந்த மடல்”** - குருதேவர் அவர்கள் பரமாச்சாரியார் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு தலைமைப் பொறுப்பாளர் அவர்களின் மூலம் 06/08/1985இல் எழுதிய கட்டுரை அஞ்சலின் நகல்.
3. **“செயல்விளக்க உசாவுத் திருவாணை”** - குருதேவர் அவர்கள் பரமாச்சாரியார் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு 22/08/1985இல் எழுதிய கட்டுரை அஞ்சலின் நகல்.

ஓம்

பொன்னேரி,
28/7/85.

(இதை 23/7/85 என்று மாற்றிக் கொள்ளுமாறு 30/7/85 தேதியிட்ட அஞ்சலில் குறிப்பிடப் பட்டுள்ளது.)

# செயல் ஆக்க ஊக்கப் பாராட்டுத் திருவோலை

பேரன்பிற்கும், பேரார்வத்திற்கும், உயர் சிந்தனைக்கும், செயல் தலைமைக்கும் இலக்கண இலக்கியமாகத் திகழும் சித்தர் மகன் அருள்மிகு தேவதானப் பட்டி காமாட்சியம்மன் சன்னிதானம் வெ.செகதீசன் அவர்கள் சமூகத்திற்கு;

ஞானத்தந்தை, தலைவர், குருதேவர், ஞானுச்சாரியார், இந்துமதத் தந்தை, அரசயோகி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரூர் விடுக்கும் செ.ஆ.ஊ.பா.திருவோலை.

1) நண்ப! அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் வழித்துணையாக அமையக் கிடைக்கும் வெற்றிகளே நமது வெற்றிகள். தாங்களும், M.C.இராமன் அவர்களும் 15/7/85 மாலை 5:30 மணியளவில் மதுரை மீனுட்சியம்மன் கோவிலுக்குச் சென்று [செய்த] அருளுலக இருளகற்றும் பணி மாபெரும் வெற்றிப் பணி. இது வரலாற்றுப் புகழ் மிக்கது. இது இதுவரை நம்மவர்களில் யாருமே பெற்றிடாத போர்க்கள வெற்றி. உங்களிருவரின் பணிவும், துணிவும், கருத்துச் செறிவும், இன்மொழியும் இருநூறுக்கும் (200) மேற்பட்டவர்களையும் மெய்சிலிர்த்துச் சிலைகளாக நிற்கும்படிச் செய்துவிட்டன. அவர்களின் சிந்தையில் பொறிக்கப் பட்ட கல்வெட்டுச்

செய்திகளும், பட்டயச் செய்திகளும் நமது இயக்க வரலாற்றின் வெற்றி முத்திரைகளே.

உங்களது வெற்றி வரலாற்றை முறையாகவும், முழுமையாகவும், நிறைவாகவும், தெளிவாகவும், கருத்துச் செறிவாகவும் நெடிய கட்டுரைகளாக எழுதி நமது அ.வி.தி. மையங்களுக்கு அனுப்புங்கள். மதுரை மாவட்டத்தார்களைக் கூட்டி வைத்து அந்த மாபெரும் நிகழ்ச்சியினை விளக்கியுரையுங்கள்.

2) இந்த வெற்றிப் பயணம் தொடரும் வண்ணம் நம்மவர்களில் வசதி வாய்ப்பு உள்ளவர்களை எல்லாம் திரட்டிக் கொண்டு சன்னிதான உடையில் கொடி பிடித்து, மயில்பீலி வைத்துக் கொண்டு ஒரு தட்டில் திருநீறு, மஞ்சள், ... பொருள்களுடன் வாரத்தில் குறிப்பிட்ட சில நாட்கள் கட்டாயமாக மதுரை மீனாட்சியம்மன் கோயில் சென்று ஏற்கனவே வெற்றி கண்ட அதே மண்டபத்தில் அமர்ந்து நமது கொள்கை விளக்க முழக்கங்களை வழங்குங்கள். **மெய்யான இந்துமதத்**தின் வரலாறுகளையும், தத்துவங்களையும், செயல்முறைச் சித்தாந்தங்களையும், சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளையும் விளக்கி உரையுங்கள். அதே இடத்தில் நமது குருதேவர் ஏடுகளையும், அறிக்கைகளையும், புத்தகங்களையும் கடை பரப்பி விற்க யாராவது ஒருவரை ஏற்பாடு செய்யுங்கள்.

பொதுமக்களுக்கு நமது இயக்கத்தவர்களை வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் மீனாட்சியம்மன் கோயிலில் குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கலாம் என்ற நம்பிக்கை வளரட்டும், வளரட்டும், வளரட்டும். அதாவது கோயிலில் நமக்கென ஓர் இடத்தைப் பிடித்து விடுவோமானால் காட்டுத் தீ போல் நமது கொள்கைகளும், குறிக்கோள்களும் மதுரை மாநகரில் பரவிடும். யாமும் ஒரு நாள் பகல் முழுதும் கூட நீங்கள் வெற்றி கண்ட இடத்திலேயே அமர்ந்து ஒரு சிறிய கருத்துப் பரிமாற்ற மாநாட்டை நடத்திடுவோம்.

இந்த அரிய, பெரிய, கூரிய, சீரிய, நேரிய வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த வெ.செகதீசன் ஆகிய உங்களுக்கும், அருள்மிகு தாயுமானவர் சன்னிதானமான M.C.இராமனுக்கும் சிறந்த பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம் யாம். விரைவில் நம்மவர்கள் அனைவரும் உங்களுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளார்கள்.

3) அன்புகூர்ந்து இனிமேல் இதுபோல் நீங்கள் இருவரும் தனித்துச் செல்ல வேண்டாம். உங்களுக்கு இந்துமதத்தின் கருங்காலிகளாலும், கூலிகளாலும், போலிகளாலும், துரோகிகளாலும் ஆபத்து ஏற்பட்டு விடும். எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை. நம்மவர்களுக்கு இடையில் குருவாணைகளை மறந்தும், துறந்தும், மாற்றியும், திரித்தும், ஒதுக்கியும், பதுக்கியும் அவரவர் விருப்பப்படி பதவியாசையோடும், புகழாசையோடும் செயல்படுகின்ற காரிருள் சூழ்ந்திருக்கின்ற நேரமிது. இந்த நேரத்தில் நீங்கள் குருவாணையை உயிரென மதித்து, குருவாணைப்படி மதுரை மீனாட்சியம்மன் கோயில் சென்று அ.வி.தி. பணியாற்றி மாபெரும் வெற்றி பெற்றிருப்பது காரிருளை அகற்றிட காலைக் கதிரவன் புறப்பட்டது போல் இருக்கிறது. உங்களின் வெற்றியை மதிக்கிறோம், போற்றுகிறோம், பாராட்டுகிறோம். உங்களை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. அன்புகூர்ந்து மதுரை மாநகர வட்டாரத்திலுள்ள அனைத்துக் கோயில்களுக்கும் சென்று இந்த வெற்றி முத்திரையைப் பதித்திடுங்கள்.

4) அன்பு மகனே! உனது (மனைவி) துணைவி அருள்மிகு அன்னபூரணியம்மன் சன்னிதானம் சித்தரடியாள் கார்த்தியாயினி மிகுந்த பயபத்தியுடன், சித்த சுத்தியுடன், பச்சிலைகளைத் தயாரித்து இடித்து வசுத்திரகாயம் செய்து குருதேவருக்கு காணிக்கையாக அனுப்பியதற்கு மிக்க நன்றி. பாராட்டு. மிக்க மகிழ்ச்சியோடு இந்த பச்சிலைகளை இரவு பகலாக சாப்பிட ஆரம்பித்து இருக்கிறோம். அவளுக்கு சித்தர் நெறி பற்றிய நூலறிவும், அநுபவ அறிவும் உன்னால்தான்

சிறுகச் சிறுக ஏற்பட வேண்டும். ‘எதையும் அச்சுறுத்தியோ அன்றி, இச்சகம் பேசியோ செயலாக்குவது நிலைத்து நிற்காது’ என்ற குருவாசகப் படியே செயல்பட வேண்டும் நாம்.

நம்மவர்கள் இம்மண்ணுலகின் மூல தத்துவத்தை, முதல் தத்துவத்தை, கால ஓட்டங்களை வென்ற தத்துவத்தை, கருத்துப் போராட்டங்களையும் மாற்றங்களையும் வென்ற தத்துவத்தை நூலறிவாகவும், செயலறிவாகவும், துய்ப்பறிவாகவும், உய்த்துணரும் மெய்யுணர்வாகவும் .... பெறக் கூடிய அரிய பெரிய கூரிய சீரிய நேரிய உரிய உயரிய வாய்ப்பினைப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் காலத்தில் வாழ்வதாலும், நேரடியாக அவரோடு பழகுவதாலும்தான் பெற்றுள்ளோம் என்ற அறிவியல் நிலையோடு செயல்பட்டால் போதும். அதுதான் அருட்புரட்சியை அறிவு விழித்த நிலையில், விஞ்ஞானச் சூழலில், பகுத்தறிவுப் போக்கில் நிகழவும்; உலகியல் பயன்மிக்க ஒன்றாகச் செயலாக்கவும் செய்யும்.

எனவே, கார்த்தியாயினியை நமது தத்துவங்களையோ, சித்தாந்தங்களையோ, செயல்முறைகளையோ புரிந்து கொள்ளாமல் செயல்படச் செய்து விடாதே! “கண்மூடித்தனமான நம்பிக்கையோ, கட்டாயத்துக்கு உட்பட்டுச் செய்யும் செயலோ முழுமையான பயனைத் தராது” என்ற திருவாசகக் கருத்தை நம்மவர்கள் புரிந்தும் புரியவைத்தும் செயல்படல் வேண்டும். கார்த்தியாயினியை வாழ்த்துகிறோம். காயந்திரி மந்தரம், சீவ காயந்திரி மந்திரம் முதலியவைகளைப் பயிற்சி செய்யச் சொல்லுக. ஞானக்காட்சிச் செல்வியாக அவளை அறிவித்து அதற்குரிய ஆற்றலையும், அருளையும் வழங்கியுள்ளோம். அவளைப் பூசையில் பயன்படுத்து, செயல்படுத்து. நீ ஞானக்காட்சி வழங்கு நாயகமாகச் செயல்பட்டு அவளைச் சித்திகளில் சிறக்கச் செய்திடு. கணவனும், மனைவியுமாக அருட்பணியாற்றினால் மிகப்பெரிய சாதனைகளைச் செய்ய முடியும். புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக. இருவரையும் பரிபக்குவ வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

5) இரவு வீடு திரும்பியதும் உனது உள்நாட்டு அஞ்சலைக் கண்டோம். அதில் சுருக்கமாக மண்டலப் பூசை பற்றியும், எமது கண்டிப்பின் வேகம் பற்றியும் எம்மை மறந்தும், துறந்தும், தடுத்தும், விடுத்தும் அவரவர் விருப்பப்படி முடிவெடுத்துச் செயல்படும் நிலைகளைத் திருத்திட விடுத்த கருத்துக்களின் வருத்தம் பற்றியும், .... மனந்திறந்து நீ எழுதி இருக்கும் எண்ண ஓட்டம் கண்டோம். அநேகமாக இன்றைய நமது செயல்வீரர் கூட்டத்தில் உன்னைப் போல் சிலர்தான் இப்படித் தலைமையை மதித்துச் செயல்படும் எண்ண ஓட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள். இப்பேருண்மையினை நீயும் நானுமாவது உணர்ந்து தெளிந்து செயல்பட வேண்டும்.

ஏனெனில், ஓராண்டுக்கு மேலாக எம்மருகிலேயே இருந்து <u>பொருளுலக அருளுலகப் பணிகள் அனைத்தையும் கவனித்த தலைமைப் பணியாளரான தெய்வீகாச்சாரியார் சோ.இரவீந்திரனே எம்மைப் புரியாமல், எம்மிடம் அனுமதி கேட்டால் யாம் மறுப்போமென்று அஞ்சி; சென்னையிலிருந்து புறப்படும் போதே ஒருமாத காலம் தமது சொந்த ஊரில் தங்கப் போகும் திட்டத்தை எம்மிடம் கூறாமல் மற்ற அனைவரிடமும் கூறிவிட்டுச் செயல்பட்டுள்ளார்</u>. இந்த அளவு குருவிடம் அன்பும், பத்தியும், நம்பிக்கையும், உரிமையும், உணர்வும், புரிமுகமும், ... பெற்றுள்ளார் தலைமைப் பணியாளரே என்றால் மற்றவர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? -

எனவேதான், அவர் <u>உயர்திரு தெய்வீகாச்சாரியார் சோ.இரவீந்திரன்</u> தமது விருப்பப்படி மேலும் சில வாரங்கள் அங்கேயே தங்கியிருக்கட்டும் என்று அனுமதி வழங்கியுள்ளோம். இங்கே பத்தவச்சலம், விசயராகவன், சௌந்தரராசன் என மூவர் உள்ளனர். எனவே, யாம் தந்தியடித்தோ, அஞ்சல் எழுதியோ அழைத்த பிறகே; சோ.இரவீந்திரன் சென்னை வரட்டும். எமக்கு அவரிடம் வருத்தமே இல்லை. அவர், <u>நமது இயக்கப் பணிகளை முழுநேர ஊழியராகச் செயல்பட்டு அணி பெறச் செய்யட்டும்</u>. இதனை அவருக்கு நன்கு தெரிவித்து விடுங்கள். அவர்

இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை ... முதலிய மாவட்டங்களில் மின்னல் வேகச் சுற்றுப்பயணங்கள் செய்யட்டும். குருதேவர் சந்தா + மலர் = ரூ.15 + 5 = 20 வாங்கட்டும். அ.வி.தி. உறுப்பினர் தொகையும், சில அறிக்கைகளுக்கு விலையுமாகச் சேர்த்து ரூ.5.00 பெற்று அ.வி.தி. அட்டவணையில் உறுப்பினர்கள் சேர்க்கட்டும். நேரில் இவற்றை அறிவித்திடுக. **குருவாணை**.

6) தத்துவ வாரிசே! உன்னோடு மனந்திறந்து பேச வேண்டும். முன்னனுமதி பெற்று ஒரு வாரம் அல்லது பத்து (10) நாட்கள் சென்னை வந்து தங்கிச் செல்ல ஏற்பாடு செய். எமது சம்மதம் பெற்ற பிறகே விடுமுறை எடுக்க வேண்டும், புறப்பட வேண்டும். அவசரம் கூடாது! மதுரை வட்டாரத்தார் அனைவருக்கும் எமது அஞ்சல்களை உடனுக்குடன் படித்துக் காட்டு. பல நகல்கள் எடுத்து எமக்கு அனுப்புவதுடன்; கட்டாயமாக பன்னிரண்டு (12) கையெழுத்துப் பிறதி நூலகங்களுக்கும், சிறப்பான புதியவர்களுக்கும் நகல்கள் அனுப்பிடுக. வெற்றியுண்டாகட்டும்! வாழ்த்துகிறோம். செயல்படுக! **குருவாணை**. 24/7/85.

7) துணிவும், பணிவும் மிக்க ஏற்புச் செல்வ! முன்பெல்லாம் நமது திருமந்திற ஓலைநாயகம், பரமாச்சாரியார், அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்கள் எம்மைக் குருகுலம் வரச் சொல்லிப் பலமுறை வேண்டி விரும்பி அஞ்சல்கள் எழுதியும், பலர் மூலம் அஞ்சல் எழுதியும், .... மிகப் பெரிய முயற்சிகளைச் செய்து எம்மை வரவழைப்பார். அதுவும் முன்கூட்டியே பணம் அனுப்புவார். எமக்கு என்னென்ன தேவையென்ற பட்டியலை எழுதச் சொல்லுவார். யாம் எள் கேட்டால் எண்ணையே தருவார். தம்மிச்சையாகவே பலரையும் அறிமுகப்படுத்தி அடுத்தடுத்து எமது வருகை அமைய வேண்டுமென்று மன்றுடுவார். யாம் வரும் வரை எங்கே, வராமல் இருந்திடுவோமோ என்றஞ்சுவார். பெரும்பாலும் அவருடைய சம்பளத்திலிருந்துதான் செலவழிப்பார். எம்மால் அடிக்கடி கடனாளியாகிடுவார். எமது விருப்பம் என்னவென்பதை

எல்லாம் ஊகித்து, ஏழையான அவர் ஏராளமாகச் செலவு செய்து பல பொருள்களேயும் வாங்கி அனுப்புவார்.

ஆனல், இன்று; இன்றைக்கு பல ஆயிரம் செலவு செய்யும் ஆற்றலும், ஆர்வமிக்க செயல்வீரர்களும், உதவியாளர்களும், ஆதரவாளர்களும், கிளே நிலேயங்களும், ... வளர்ந்திருக்கிற நேரத்தில் அவரால் எதுவுமே செய்ய முடியாத சூழ்நிலேகள் உருவாகி “குருதேவர் ஆண்டுக்கு ஒருமுறை வந்து போனல் போதும்.”... என்று கருதவும், செயலாக்கவும் நேரிட்டு விட்டது. அதாவது, பலர் குருதேவராகவே செயல்பட்டுப் பரமாச்சாரியாரைக் கலக்கிக் குழப்பி மயங்கித் தவித்துச் செயல்பட முடியாத நிலேயை உருவாக்கியுள்ளனர். எனவே, ‘எடுப்பார் கைப்பிள்ளேயாகிக் குருதேவர் துணேயோ, வழிகாட்டலோ எட்ட ஏட்டளவில் இருந்தால் போதுமென்று முடிவெடுத்துள்ளார். நல்லது! யாமும் இந்த முடிவை வரவேற்கிறோம். ஒப்புக் கொள்கிறோம். ஏற்கிறோம். -

ஆனல் அருளாட்சி நாயகமாகச் செயல்பட வேண்டியிருப்பதால்; யாம் எமது தேவைகளுக்கேற்ப எமது சொந்தப் பொறுப்பில் மதுரை வந்து மீனட்சி அம்மன் ஆலயம், திருப்பரங்குன்றம், அழகர் மலே, ... முதலிய வட்டாரங்களில் வழிபாடுகள் செய்து திரும்ப உள்ளோம். இதனேத் தவருக யாரும் எண்ண வேண்டாம். உனது வீடு வசதிப்படாது என்ருல், சாரதா சேகர் வீட்டிலோ, வேறு இடத்திலோ தங்கித் திரும்புவோம். -

குறிப்பு:- ஒருவேளே உனக்கும் கூடத் தொல்லே தர விரும்பாமல் யாருக்கும் அறிவிக்காமல் யாமே விரைவில் ஒருசில முறை மதுரை வந்து திரும்ப நேரிடலாம். வருந்தற்க. - தேவையான தனிமனிதர்களுக்கு மட்டும் உலகியலின் படி; யாம் மதுரையிலிருக்கும் போது அழைப்பு விடுத்துச் சந்திக்க நேரிடலாம். அது பற்றியும் யாரும் சந்தேகிக்கவோ, வருந்தவோ வேண்டாம். நாம் அரசியல் தலேவர்கள் போல் தத்துவ

இயக்க நடைமுறையோடு தலைமையின் ஆளுமை எனும் நடைமுறையையும் செயலாக்க விரும்புகிறோம். புரிந்தவர் புரியட்டும்.

8) இந்த நாட்டில் எண்ணற்ற கட்சிகளும், ஒவ்வொரு கட்சியிலும் எண்ணற்ற தலைவர்கள் ... என்ற இழிநிலையும், பழிநிலையும் தொடருவதால்தான் தமிழினத்துக்கும், மொழிக்கும், பண்பாட்டுக்கும், உரிமைக்கும், பெருமைக்கும் .... மிகப் பெரிய ஆபத்துக்கள் தொடர்ந்து வந்தும் கூடத் தடுப்போருமில்லை, எதிர்ப்போருமில்லை, மறுத்துப் போரிடுவோருமில்லை. ஆனால், கட்சிகளுக்கிடையில் போரும், கட்சிக்குள்ளே போரும் நிகழாத நேரமே இல்லை. அதாவது, கட்சிகளுக்கும் தத்துவ அடிப்படை இல்லை; தலைவர்களுக்கும் தத்துவ அடிப்படை இல்லை. எனவேதான், பதவிச் சண்டை, பணச் சண்டை, பட்டச் சண்டை .... என்று பலவகைச் சண்டைகளைப் பெரும் போர்களாகக் கட்சிகளும், தலைவர்களும் தொடர்ந்து நிகழ்த்துகிறார்கள். இவற்றைப் புரிந்து கொள்ள முடியாத பொதுமக்களும், புரிய வைக்கத் தெரியாத தொண்டர்களுமே நமது தாயகத்தில் நிறைய இருக்கிறார்கள்.

நாம் அனைத்துத் துறைகளிலும் அன்னியர்களையே முதலாளிகளாக, எசமான்களாக, தலைவர்களாக, நம்பிக்கைக்குரிய நல்லவர்களாக ... ஏற்றுப் போற்றிப் பணிந்து வாழும் அடிமைச் சிந்தையும், கூலி நெஞ்சும், கங்காணி உணர்வும், தாழ்வு மனப்பான்மையும், தன்னம்பிக்கையின்மையும் .... அடியோடு அகற்றப் பட்டேயாக வேண்டும், அகற்றப் பட்டேயாக வேண்டும், அகற்றப் பட்டேயாக வேண்டும். இவற்றைத் தெளிவாகப் புரிந்து கொண்ட நாம், முழுமையோடும், முறையோடும், நெறியோடும், நிறைவோடும், கட்டுப்பாட்டோடும் தலைமையை முழுமையாக ஏற்றுச் செயல்படும் வீரர்களைப் பெற்ற இயக்கமாகவே நமது இயக்கத்தை மாற்ற வேண்டும். எனவே, யாம் விதிக்கும் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும்,

கண்டிப்புக்களையும் அப்படியே ஏற்றுச் செயல்படுத்தும் பொறுப்பும், பொறுமையும் பெற்று வளர வேண்டும் நம்மவர்கள்.

9) நமக்குள்ள எதிரிகள் வலிமையானவர்கள், வளமானவர்கள், வசதி வாய்ப்பு மிக்கவர்கள், சமய சமுதாய கலை இலக்கிய அரசியல் ... மேலாண்மையை மறைமுகமாகவும், நேரடியாகவும் பெற்றிருக்கிறார்கள். எனவே, நாம் முதலில் துரோகிகளையும், கோழைகளையும், ஊசலாட்டக் காரர்களையும், தன்னல வெறியர்களையும், தன்னம்பிக்கை இல்லாதவர்களையும், மொழிப்பற்று இல்லாதவர்களையும், இனப்பற்று இல்லாதவர்களையும், இன ஒற்றுமையுணர்வு இல்லாதவர்களையும் .... திருத்த வேண்டும்! செம்மைப் படுத்த வேண்டும்! உண்மையும் திண்மையும் உடையவர்களாக்க வேண்டும். இதற்கு இ.ம.இ.யின் பணிகள்தான் தேவை! தேவை! தேவை! புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக! தமிழர்கள் ஒற்றுமை இல்லாததால்தான் கெட்டுச் சீரழிந்து அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள்.

10) நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் போட்டி போட்டுக் கொண்டு அன்னியர்களை நமது தலைவர்களாக, வழிகாட்டிகளாக, வழித் துணைகளாக ... ஏற்றுப் போற்றி அடி பணிகிறார்கள். இந்த அவலக் கேவலங்களை முழுமையாக அகற்ற வேண்டுமானால்; நமது மொழியை, இனத்தை, பண்பாட்டை, வரலாற்றை, நாகரீகத்தை, தத்துவத்தை, ... நன்கு தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, உணர்ந்து தெளிந்தவர்கள்தான் நமக்குத் தலைவர்களாக, வழிகாட்டிகளாக, வழித் துணைவர்களாக இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்த வேண்டும்.

மிக நெடுங்காலமாகத் தமிழனுக்குத் தமிழனே தலைவனாகச் செயல்படும் பொன்னான வாய்ப்பு உருவாகவே இல்லை. அவ்வரிய, பெரிய, நேரிய, சீரிய, கூரிய வாய்ப்பு உருவாக வேண்டுமேயானால் (Religion is the best instrument for the betterment of our People) **“நமது**

**மக்களின் முன்னேற்றத்துக்குப் பயன்படக் கூடிய மிகச் சிறந்த சாதனம் மதம்தான்"** என்று குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், குருபாரம்பரியம் ... முதலியவை கூறும் கருத்தை உணர்ந்து செயலாக்குவதுதான். அதாவது, இன்று பல்வேறு காரணங்களால் (மதம், சாதி, கட்சி, பதவி வெறி, பண வெறி, பேராசை, தன்னல வெறி, அடிமைப் புத்தி, கூலி மனம், கங்காணிச் சிந்தை ... முதலியவை) **பிரிந்து கிடக்கும் நமது மக்களை ஒற்றுமைப் படுத்தும் பேராற்றலும் நமது இந்துமதத்துக்குத்தான் உண்டு**.

அதாவது இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களின் (The Tamils are the aboriginates of the India) மூலமதமான இந்துமதம்தான் மீண்டும் அவர்களை ஒன்றுதிரட்டி ஒற்றுமைப் படுத்தும் ஆற்றலுடையது. அதாவது, இம்மண்ணுலகின் மூத்த குடியான தமிழர்கள்; பழமையின் காரணமாக இன ஒற்றுமையை விட்டுவிட்டு பிற இனங்களிடம் கவர்ச்சியுற்று அடிமைப் பட ஆரம்பித்து விட்டார்கள். **இவர்களுக்கு மொழியின் தொன்மை, இலக்கியத்தின் மேன்மை, பண்பாட்டின் தன்மை, நாகரீகத்தின் திண்மை, மதத்தின் உண்மை, இன ஒற்றுமையின் நன்மை, .... முதலியவைகளைப் புரியச் செய்து விட்டால் போதும். பிறகு, ஒவ்வொரு வீடும் பாசறையாகும். ஒவ்வொரு மனிதனும் அருட்படைத் தளபதியாகிடுவர்**. அதன்மூலம் அருட்போர் தெருவுக்குத் தெரு, ஊருக்கு ஊர் நிகழ்ந்தே தீரும்; அருட்பேரரசு அமைந்தே தீரும்.

எனவேதான் மதவழிப் புரட்சி நிகழ்த்தப் பட்டேயாக வேண்டும். அது மிதவழிப் புரட்சியாகவே இருக்க வேண்டும். அதுவும் அனைத்தும் அமைதி வழியில், அன்பு வழியில், அற வழியில், சமாதான வழியில், அருள் வழியில், ஆக்க வழியில் ... நிகழ்த்தப் பட்டேயாக வேண்டும். அதற்கு முதலில் தமிழர்களைத் தமிழர்களாக்க வேண்டும். ஏனெனில், பதினெண்சித்தர்களின் கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் தமிழினத்தில் தொடர்ந்து தோன்றித் தங்களால் இயன்ற

அளவு குறிப்பிட்ட குழுக்களையாவது தமிழின உணர்வோடு, காலங்கள் தோறும் வாழச் செய்து வருவதால்தான்; உரோமானியர், கிரேக்கர், பாபிலோனியர், மெசப்பட்டோமியர், மேயோக்கள், ... முதலிய இனத்தார் முழுமையாக அழிந்து ஒழிந்தது போல் தமிழினத்தவர் அழிந்தொழிய வில்லை. பிறரால் அழிக்கவும் முடியவில்லை.

எனவேதான் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் தோன்றியுள்ள யாம்; எமது காலத்திலேயே தமிழுணர்வை விழிச்சி பெறச் செய்யவும், எழிச்சி பெறச் செய்யவும், செழுச்சி பெறச் செய்யவும் முயற்சிக்கிறோம். எமது முயற்சிக்கு நூலறிவும், வாலறிவும் உடையவர்கள் உருவாக்கப் படுவதே அடிப்படை. இதன்படித்தான் தங்களைப் போன்றோர் உருவாக்கப் படுகிறீர்கள். அதாவது தமிழை எழுத்துக் கூட்டிப் படிக்கக் கூடிய அளவு தமிழறிவு இருந்தால் கூடப் போதும்.

ஆனால், தலைவரை மதிப்பது, தலைவர் கட்டளைப்படி நடப்பது, தலைவரிடம் மெய்யான பயிற்சிகளைப் பெறுவது, தலைவர் வழிகாட்டியபடி முயற்சிகளைச் செய்வது, தலைவர் சொல்லில் ஊசிமுனையளவு கூடப் பிறழாமல் செயல்படல், எதையும் தலைவரின் ஒப்புதலோடு செய்தல், தலைவரின் சம்மதமின்றி எதையும் செய்யாமலிருத்தல், கொள்கைக்காக எத்தகைய தீர வீரச் செயலையும் செய்யும் தரம் பெற்றிருத்தல் ... எனும் பக்குவ நிலைகள் நம்மவரிடையே கட்டுப்பாடாக வளர வேண்டும்.

எதிர்பாராத விதமாகச் சிலர்; தங்களுக்குக் குருவால் கிடைத்த சத்திகளால் அகம்பாவம், ஆணவம், கர்வம், தான்தோன்றித்தனம், தனிக்கூட்டம் சேர்த்தல், தலைவர் ஆணையை மீறி விருப்பப்படி செயல்படல், ... எனும் கீழ்த்தர நிலையில் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். இவர்கள் திருந்தா விட்டால் வேருடன் களையெடுக்கப் படுவார்கள். இவர்கள் தமிழின எழுச்சி வரலாற்றில் துரோகிகளாகவும்,

விரோதிகளாகவும் பட்டியலிடப் படுவார்கள். எனவே, வாராவாரம் ஒரே ஓர் அஞ்சலட்டையாவது எழுதிக் குருவுடன் தொடர்பு கொள்பவர்களே சித்தர் நெறிச் செல்வர்களாக வளவளர்ச்சி பெற முடியும்! முடியும்!! முடியும்!!! ... என்பதை உணர்ந்தும், உணர்த்தியும் செயல்படுக! நாளை நமதே! வெற்றி பெற்றே தீருவோம்! அன்பே சிவம்.

அன்பு

**தலைவர், குருதேவர், இந்துமதத் தந்தை,**
**ஞானாச்சாரியார், அரசயோகி,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூறார்.**
27/07/1985.

நகலெடுத்தவர்:-

அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலைக்காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தர் வாரிசு, சித்தரடியான் ம.செ.விசயராகவன் B.Sc., (S/O C.M.செயராமன், 2/80 சுப்பிரமணியர் கோவில் அருகில், வேம்படிதாளம் P.O., சேலம் மாவட்டம், PIN 637504.)

ஓம் திருச்சிற்றம்பலம்.

//உண்மை நகல்//
//மூலம்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்த 12 பக்க நகல்.//

பொன்னேரி,
6.8.85.

# செயல்விளக்கச் சித்தாந்த மடல்

பேரன்பும் பெருமதிப்புக்குமுரிய அருள்மிகு பரமாச்சாரியார் அவர்களுக்கு,

குருதேவர் சார்பாக குருவாணை ஓலைநாயகம், தலைமைப் பொறுப்பாளர், சி.கவிக்குமார் வரையும் மடல்.

1) அனைத்தும் ஆத்தாக்கள் தாத்தாக்கள் செயலே!

2) நாம் எதையும் உலகியலாக சிந்தித்து ஒரு சில செயல்விளக்கச் சித்தாந்தங்களை உருவாக்கிக் கொண்டு அதனை அருளுலகத்தாரிடம் அருளுலக நாயகங்களான தாத்தாக்கள் ஆத்தாக்களிடம் கூறி ஒப்புதலும், சம்மதமும் பெற்றுத்தான் செயலாற்றுகின்றோம். எனவே, அனைத்துத் தனிமனிதர்களின் விருப்பங்களையும், அநுபவங்களையும், அநுபவச் சிந்தனைகளையும், ஆர்வமிகு செயல்திட்டங்களையும், உயர்ந்த குறிக்கோள்களையும் விரிந்த சிந்தையோடும், பரந்த நெஞ்சத்தோடும் வரவேற்பதே நமது இயக்கப் பண்பு! மாண்பு! இதன்படி வருகிற அமாவாசையில் மதுரையில் நடைபெற இருக்கும் 'கருத்துப் பரிமாற்ற கருத்தாய்வு கூட்டம்' சிறப்பாகச் செயல்படுவதற்காக சென்னையிலிருந்து நிறுவன நிர்வாகக் குழுவின் சார்பாக G.சத்திவேல் B.E., சீவன்குமார் B.E., சத்திநிலை இருப்பாளர் சுப்பிரமணி ஆக மூவரும் மதுரை வருகின்றனர். இவர்களை வரவேற்று நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

3) உடனடியாக இந்த மாத அமாவாசைக் கூட்டம் மதுரையில் என்று? எங்கே? எப்பொழுது? யாருடைய இல்லத்தில்? (முகவரியுடன்) நடைபெற உள்ளது என்பதை உடனடியாக தந்தி போல் பாவித்து குருதேவருக்கும், G.சத்திவேலுக்கும் (25, ஹாஜி மூசா சேட் வீதி, தி.நகர், சென்னை-17) தெரிவிக்கவும். இவர்களின் வருகையைப் பற்றி அனைவருக்கும் அறிவித்து கூட்டத்திற்கு அனைவரையும் கலந்து கருத்துக்களைத் தெரிவிக்க அழைப்பு விடுக்கவும்.

4) மாதந்தோறும் அமாவாசையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தனிமனிதர்களின் ஐயங்கள் போக்கப் படுதல் அவசியம். இதற்காக தனிமனிதர்கள் தங்கள் ஐயங்களைக் காகிதத்தில் எழுதி, தலைமைச் செயலாளர், தலைமைப் பொறுப்பாளர், தலைமைப் பணியாளர் (செம்பியம்) முகவரிக்கு அனுப்பி விட்டு; கூட்டத்திலும் அதன் நகலை கையில் வைத்துக் கொண்டேதான் கேட்க - பேச வேண்டும்.

<u>குறிப்பு</u>:-

(a) இக்கூட்டங்களில் யார் எந்த கேள்வி கேட்பது என்றாலும் சரி; குறைந்தது மூன்று நகல்கள் எடுத்து ஒன்றை நேரில் தலைமைச் செயலாளரிடம் கொடுத்து விட்டு மற்ற இரண்டை பொறுப்பகம் செம்பியம் அனுப்பச் சொல்லி விட்டுத்தான் நேரில் தன்னுடைய நகலைப் படித்துத்தான் கேட்க வேண்டும். எப்படியும் கூட்டம் நடைபெறுவதற்கு முந்திய நாள் கேட்கப் பட வேண்டிய கேள்விகள் எழுதித் தரப்பட்டாக வேண்டும். அதில் கேள்வி கேட்பவரின் முகவரி, அருட்பட்டங்கள் தெளிவாகக் குறிக்க வேண்டும். ஒவ்வொரு கூட்டத்தின் முடிவிலும் அந்தக் கூட்டத்தில் கேட்கப்பட வேண்டிய கேள்விகளின் நகலனைத்தையும் கோப்பில் சேர்க்க வேண்டும்.

(b) ஒவ்வொரு கூட்டத்திலும் குறிப்பேடு சுமார் 200 பக்கமுள்ளதில் (பெரிய பைண்டிங் நோட்டு) கூட்டம் நடக்கும் தேதி, மாதம், ஆண்டு, நேரம், இடம், கூட்டத் தலைவர், சிறப்பு விருந்தினர் ... முதலியவை குறிக்கப்பட்டு கீழே வரிசையாக கேள்விகள் எழுதிட வேண்டும். கடைசியில் அனைவரின் கையொப்பமும் இட வேண்டும்.

(c) அடுத்த கூட்டம் என்றைக்கு, எங்கே, எப்போது நடைபெற இருக்கின்றது ... என்ற குறிப்பையும் எழுதி, இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட முடியாதவற்றுக்கு அடுத்த கூட்டத்தில் விளக்கப் படும் என்று எழுதிட வேண்டும். மேற்கண்ட வினவை சென்னைக்கு எழுதி அனுப்பினால் அதற்குரிய விளக்கத்தை அஞ்சலிலோ அல்லது சென்னையிலிருந்து வரும் உறுப்பினர் மூலமோ தலைமைச் செயலாளருக்கு தரப்படும்.

(d) தலைமைப் பீடம் முடிவெடுத்துக் குருவாணையாகவோ, அருளாணையாகவோ, திருவாணையாகவோ முடிவெடுக்கப்பட்ட செய்திக்கு மேலும் விளக்கமோ, விவரமோ கேட்க அனுமதிக்கக் கூடாது. இதற்கு அனுமதியளிக்கக் கூடாது. அது ஒழுங்கமைப்பையும், கட்டுப்பாட்டையும் மீறியதாகக் கருதப்படும்.

5) இந்த ஆய்வுக் கூட்டத்தின் கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் தெரிந்து கொள்வதற்கு என்று தலைமைப் பீடத்தாலும், நிறுவன நிர்வாகக் குழுவினாலும், தனிமனிதர்களாலும், வட்ட மாவட்ட அமைப்புக்களாலும் எழுத்துப் பூர்வமாக அனுப்பப் படுகின்ற திட்டங்களையும் விவாதிக்கப்பட வேண்டும்.

குறிப்பு:-

இந்த ஆய்வுக் குழுவில் விவாதிக்கப்படக் கூடியவைகள் பற்றி வெளியே எந்தத் தனிமனிதரும் பேசுவதோ விமரிசிப்பதோ

கூடாது! அப்பொழுதுதான் ஒழுங்கும் கட்டுப்பாடும் நம்மிடையே மிளிரும். எதையும் இக்கூட்டத்தினரிடையேதான் பேச வேண்டும்.

6) நாம் எல்லா மாவட்டங்களிலும் சம அளவில் வளரவில்லை என்பதினால், இந்தக் கூட்டத்திற்கு மாதாமாதம் பதிலிகளை அனுப்பப்பட முடியாத மாவட்டங்களுக்கு இக்கூட்டம் பற்றிய முழு விவரங்களையும், அஞ்சல் கட்டுரைகளாக நகலெடுக்கப்பட்டு அம் மாவட்ட மையங்களுக்கு அனுப்ப வேண்டும். அப்பொழுதுதான் நமது வளர்ச்சி ஒரே சீராக அமையும்.

<u>குறிப்பு</u>:-

பல மாவட்ட மையங்கள், வசதி படைத்தவர்களோ அன்றி பல அடியான்கள் ஒன்று சேர்ந்து தங்கள் பதிலிகளாக ஒருவரையாவது இக்கூட்டத்திற்கு அனுப்பி வைக்க முயல வேண்டும்.

7) வருகின்ற செப்டம்பர் மாதம் 15 முதல் 18க்குள் குருதேவர் மதுரை வந்து தங்கி அருட்பட்டம் பெற்றவர்களை மட்டும் ஒருங்கு கூட்டி நமது கொள்கை, செயல்திட்டம், குறிக்கோள் ... முதலியவைகளை இன்றைய வளர்ச்சி நிலைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்பப் புதிய நிலைகளை உருவாக்க விரும்புகின்றார். இதில் கூடுகின்றவர்கள்தான் இயக்கத்தின் அடிப்படையை அமைக்கின்றவர்களாவார்கள். எனவே, 15ஆம் தேதிக்கு மேல் எந்தத் தேதியில் குருதேவர் வந்தால் அனைவருக்கும் வசதியாக இருக்கும் என்பதை உடனே அறிவிக்கவும். ஆய்வுக் கூட்டம் இரண்டு நாள் தேவையா? ஒரு நாள் தேவையா? இரவும் பகலும் தொடர்ந்து நடைபெற வேண்டுமா? பகலில் மட்டும் போதுமா? அனைவருக்கும் பொதுச் சாப்பாடு நன்மை பயக்குமா? அவரவர் வீட்டிலிருந்து கொண்டு வரும் சாப்பாடு நன்மை பயக்குமா? <u>இந்தக் கூட்டம் நம்மவர்களுக்கிடையில்</u>

நல்ல ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் உருவாக்குவதாக அமைய வேண்டும்.

8) நமது இயக்கம் மொழி விடுதலை, பண்பாட்டு விடுதலை, இன விடுதலை, நாட்டு விடுதலை, பொருளாதாரச் சமத்துவம் ... உண்மையான சகோதரத் தத்துவம், சர்வாதிகார ஒழிப்பு, எதேச்சாதிகார அழிப்பு, தேவையில்லாத போட்டி பொறுமை சண்டைசச்சரவு ஒழிப்பு ..... முதலியவைகளுக்குப் போராடுகின்ற புரட்சி இயக்கம். நாம் மதவழிச் சிந்தனையாளர்கள், மிதவழிச் செயல்திட்ட வாதிகள், உண்மையான அருளாளர்கள், அன்புவழியிலும், அருள்வழியிலும், அறவழியிலும் நம்பிக்கை உடையவர்கள். எனவே, நமது கூட்டத்தில் உணர்வு வயப்பட்ட காரசார விவாதங்களுக்கு இடமே இல்லை! இல்லை! இல்லை! அதாவது கேள்வி கேட்பவர்களும் சரி! பதில் கொடுப்பவர்களும் சரி! பொறுமையோடும், பொறுப்போடும்தான் செயல்பட வேண்டும். அரசியல்வாதிகள் போன்ற கோப தாப வேக வெறிப் பேச்சுக்களுக்கு இடமே இல்லை! இல்லை! இல்லை!

குறிப்பு:-

நம்மவர்களில் அனைவருக்கும் கேள்வி கேட்டு ஐயங்களைப் போக்கிக் கொள்ள உரிமை உண்டு! அதற்காக அனைவரும் பொறுப்போடும், பொறுமையோடும் காத்திருந்துதான் உரிய பதிலைப் பெற வேண்டும்.

9) இக்கூட்டத்தில் (வரும் கூட்டத்தில்) மாநில மாநாடு செயல்திட்டம் பற்றிச் சிந்தித்து விவாதிக்க வேண்டும். இதற்காக குறிப்புக்களை வழங்கிச் செயல்பட வேண்டுகின்றோம்.

10) மதுரை குப்பல்நத்தம் சென்று ஆராய்ச்சி செய்து திரும்பிய மதுரை அடியான்களுக்கும், சேலம் காக்கையர் கோவிலில் சென்று ஆராய்ச்சி செய்து திரும்பிய சேலம் அடியான்களுக்கும் மேற்காணும்

கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் தீர்மானம் கொண்டு வரக் கேட்டுக் கொள்கின்றேம். அதேபோல் முன்னதாகவே நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக் கொண்டு செயலாற்றுங்கள்.

11) பெங்களூர் வேங்கட்டரமணனின் நண்பர் திருமணத்திற்காகவும், கர்நாடக மாநிலத்தில் நமது இயக்க அறிமுகத்திற்காகவும், குருதேவர் சன்னிதான உடையில் 18, 19, 20 தேதிகளில் மைசூர், பெங்களூர் செல்கிறர். அதற்கு 17/8/85 அன்றிரவு 'B Coach'இல் குருதேவருடன் நானும் செல்கின்றேம். 20/8/85 இரவு சென்னை திரும்புகின்றேம். மற்றைய விவரம் பின்பு.

அன்பு
கவிக்குமார்.

<u>நகலெடுத்தவர்</u>: அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், சித்தர் மகன் ம.செ.விசயராகவன் B.Sc., 07/08/1985.

//உண்மை நகல்//

//மூலம்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//

# செயல்விளக்க உசாவுத் திருவாணை

1) அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அவர்கள் அ.வி.தி.யின் தலைமைச் செயலாளராக இருந்து ஆற்றும் பணிகள் பற்றிய செயல் விளக்க நிலைகள் உடனுக்குடன் தலைமைப் பீடத்துக்கும், தலைமைப் பொறுப்பாளருக்கும் அறிவிக்கப்படல் வேண்டும் என்பதற்காகவும், ஆங்காங்கே கையெழுத்துப் பிறதி நூலகம் நிறுவுவதற்காகவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் தலைமைப் பணியாளர் சோ.இரவீந்திரன் அவர்கள் குருகுலத்தில் தங்கிச் செயல்படும் திருவாணை நிகழ்ந்துள்ளது. அவருக்கு வழக்கப்படி மாத ஊதியம் ரூ.120/- தொடர்ந்து அனுப்புவதன் மூலம் அவர் குருகுலத்திற்கு வரும் அஞ்சல்களுக்கும், கட்டுரைகளுக்கும் உடனுக்குடன் சில நகல்களாவது எடுத்து தலைமைப் பீடத்திற்கும், பொறுப்பாளருக்கும் அனுப்புவதோடு; மதுரை, காரைக்குடி, திருச்சி, சிறுமுகை முதலிய இடங்களுக்கு அனுப்பி அவர்களையும், அவற்றிற்கு நகல் எடுக்கும்படிச் செய்ய வேண்டும் என்பனவே எதிர்ப்பார்க்கப்படும் பணிகள்.

ஆனால், தாங்கள் அமாவாசை ஆய்வுக் கூட்டம் பற்றிய அறிக்கையை ஒரு சுருக்கக் குறிப்பாவது வெள்ளி இரவே இரவீந்திரன் மூலம் எழுதி சனிக்கிழமையே அனுப்பியிருக்கலாம். அல்லது திங்கட்கிழமையாவது அனுப்பியிருக்கலாம். தாங்கள் கருத்துக் கூற வேண்டுமென்பது அவசியமில்லை. ஆய்வுக் குழுவில் கலந்து கொண்ட இரவீந்திரனையே அனைத்தையும் விளக்கி ஓர் அஞ்சல்

எழுதச் சொல்லியிருந்தால் கூட்டம் முடிந்தவுடனேயே இரவு உறங்குவதற்கு முன்பே ஒரு நெடிய அஞ்சல் கட்டுரையை அவனே எழுதி அனுப்பியிருப்பான். இவை நிகழாததால்தான் இந்த உசாவல் திருவாணை அனுப்பப்படுகிறது. வருந்துகிறோம். நீவிர் வருந்தற்க!

குறிப்பு:- அன்புகூர்ந்து இனிமேல் காலதாமதமின்றி உடனுக்குடன் ஒரு சுருக்க செயல் குறிப்பு அனுப்பிய பிறகு ஒரு விளக்க மடல் அனுப்புங்கள். சத்திவேலை திங்கள் கிழமைதான் சந்திக்க வேண்டும். இன்னும் நான்கு நாட்கள் இருக்கின்றன.

2) இந்த வாரம் 24, 25 சனி, ஞாயிறு வ.ஆ.மா. வேலூருக்குச் செல்கிறோம். பெரி.முத்தையாவை வெள்ளிக்கிழமை மாலை வரச் சொல்லியிருக்கிறோம். இதுபோல் பலரையும் தனித்தனியாக வரச் சொல்லி சந்திக்கவிருக்கிறோம். இதன்மூலமாவது இயக்க முன்னணிச் செயல்வீரர்களை ஓர் இயக்க உணர்வோடு, நிருவாகப் பொறுப்போடு, நிறுவன அமைப்புக்களைப் பேணிக் காக்கும் பண்போடு செயல்பட வேண்டிய அவசியத்தையும், அக்கறையையும், நெறிமுறையையும் ... விளங்கிக் கொள்ளச் செய்ய முடியும் என்று நம்புகிறோம்.

மேலும், நம்மிடையே மரியாதையும், அன்பும், இனிமையும், ஒழுங்கும், உண்மையுமுள்ள நட்புணர்வும், தோழமையுணர்வும் பாசத்தோடு பயிராக வேண்டும். இதற்கு முன்னணிச் செயல்வீரர்கள் பொறுமையும், பொறுப்புணர்வும், பணிவும், அடக்கமும், அமைதியும், கனிவான பேச்சும், உறவுமுறையோடு பழகும் பண்பும் பெற்றிருத்தல் வேண்டும். யாருக்கும் தானென்ற வீம்போ, அகங்காரமோ, ஆணவமோ, சர்வாதிகாரப் போக்கோ, பிறரை மதியாமல் துன்புறுத்தும் போக்கோ, பிறரிடம் குற்றமே காணும் இழிந்த பண்போ, தனக்கென்று

<u>ஒரு சிறு கூட்டத்தை அல்லது ஆதரவாளர்களை மட்டும் உருவாக்கும் குழு மனப்பான்மையோ இருக்கவே கூடாது! கூடாது! கூடவே கூடாது!</u>

இவை சித்தர்நெறியின் தொன்மைகளையும், மேன்மைகளையும், நன்மைகளையும், உண்மைகளையும் வரலாற்றுப் பின்னணியோடு கூடிய இலக்கிய அறிவால்தான் உருவாக்கப்பட்டிட முடியும்! முடியும்! முடியும்! இவற்றிற்காகவே சித்தர்களின் இலக்கியம் பற்றிய செய்திகளையும் (Information), கருத்துக்களையும் (Ideas), கொள்கைகளையும் (Policies and Principles) ஒரு சில இலக்கியப் பகுதிகளாக (Pieces taken from Siddha Literatures) இப்பொழுது வெளியிடப் படுகின்றன.

இவை எல்லாம் கடந்துதான் இட்டும் தொட்டும் சுட்டியும் முழுப் பக்குவம் அடைந்த சித்தர் நெறிச் செல்வர்களுக்கு மட்டும் அருளை அநுபவப் பொருளாக வழங்கி அவர்களை அருளூற்றுக்களாக மாற்றுகிறோம். எனவே ஏமாற்றப் பெருமூச்சுகளோ, ஏக்கப் புலம்பல்களோ, எரிச்சல் முணுமுணுப்புகளோ, தலைமையின் கட்டளைகளால் கசப்பு விமர்சனங்களோ .... நம்மிடையே முளை விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**நாம் அனைவரும் ஒரு மாபெரும் தத்துவத்தின் வெற்றிக்காகப் பாடுபடுகிறோம் என்ற உணர்வோடு ஒருங்கிணைந்து பற்றுமிக்க ஒற்றுமையோடும், பணிவு மிக்கக் கட்டுப்பாட்டோடும், அடக்கமான துணிவோடும் செயல்பட வேண்டும்! செயல்பட வேண்டும்! செயல்பட வேண்டும்!**

3) டிசம்பர் மாத மாநில மாநாட்டை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தள்ளிப் போட்டு நிகழ்த்திக் கொள்ளலாம்.

ஆனால், நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு பயிற்சி முகாமாவது (A Training Camp) டிசம்பரில் நிகழ்த்தப்பட வேண்டியது அவசியம். ஆனால், தலைமைச் செயலாளராக இருக்கின்ற தாங்களே எத்தனையோ அஞ்சல்கள் எழுதியும் செப்டம்பர் 14, 15இல் அல்லது இதையொட்டிய வேறு தேதிகளில் நாம் அனைவரும் மதுரையில் கூடுவது பற்றிய முடிவுக்கு எந்தவிதமான பதிலோ செயல்திட்டமோ இன்று வரை அனுப்ப வில்லை. வருந்துகிறோம், வருந்தற்க.

குறிப்பு:- நூறு கடிதங்கள் எமது மதுரை வருகைக்கு ஏன் ஏற்பாடு செய்ய வில்லை என்று எழுதிய பிறகு; எரிச்சலும், ஏமாற்றமும், நம்பிக்கையிழந்த நிலை எமக்கு ஏற்பட்ட பிறகே தாங்கள் ஆமைவேகத்தில் "... நான் தனி மனிதன். மதுரையில் அனைவரும் நான் கேட்டதற்கு மௌனம் சாதித்து விட்டார்கள். எனவே என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை..." என்று எழுதினீர்கள். இதனை ஆரம்பத்திலேயே எழுதியிருந்தால் தலைமைச் செயலாளருக்கு எழுதியது போல் ஒரு சில தனிமனிதருக்கு எழுதி அவர்களின் செலவில் சொந்தப் பயணமாக யாமே இரண்டு மூன்று முறை மதுரை வந்து திரும்பியிருக்க முடியும்.

ஏனெனில், அ.வி.தி. தலைமைச் செயலாளரால் இயக்கப் பூர்வமாக எம்மை வரவேற்பது இயலாமல் போனதும் குற்றமல்ல. தவறுமல்ல. ஊரைக் கூட்டித் தேரை இழுப்பது எளிதல்ல. ஆனால், உங்களின் இயலாமையையும், இயக்க நிலையையும் உடனுக்குடன் விளக்கமாக நுண்மையோடும், உண்மையோடும் தெரிவித்திருந்தால் யாம் தலைவராகவோ, குருதேவராகவோ, ஞானாச்சாரியாராகவோ, பேராசிரியராகவோ,

மருத்துவராகவோ, சித்தராகவோ ஒரு சில தனிமனிதரின் உறவினராகவோ, அல்லது ஒரு சிலரின் நண்பராகவோ, தோழராகவோ தனிப்பட்ட முறையில் நேரடியாக மதுரைக்குப் பலமுறை வந்து திரும்பியிருக்க முடியும். அதன்மூலம் பல எதிர்பாராத வாய்ப்பு வசதிகளும், சந்தர்ப்ப சூழல்களும், ஆதரவுகளும், உதவிகளும் நமது இயக்கத்திற்குக் கிடைத்திருக்கும்! கிடைத்திருக்கும்! கிடைத்திருக்கும்!

எனவே இனிமேலாவது தலைமைச் செயலாளர் என்ற முறையில் எதற்கும் யோசிக்காமல், எதையும் கூட்டாமல், குறைக்காமல் அவ்வப்போது அங்கு நிலைமைகளை விளக்கியுரைத்து அஞ்சல்களை அனுப்பிக் கொண்டேயிருங்கள். அதுவே தங்களின் கடமை, பொறுப்பு. எனவே, நிகழ்ந்து விட்டமைக்கு வருந்தற்க. இப்பொழுது நிலவும் இயக்க நிலைமைகளையும், தனிமனிதர் கருத்தோட்டங்களையும் விரைவாகவும், விரிவாகவும் எழுதியனுப்புங்கள்.

4) நண்ப! நம் நாட்டிலுள்ள எந்த இயக்கத்திற்கும் தத்துவ அடிப்படையோ, சித்தாந்தச் செயல்நிலையோ, வரலாற்றுப் பின்னணியோ, இலக்கிய இலக்கணத் துணையோ, பண்பாட்டுப் பாரம்பரியமோ, நிறுவனக் கட்டமைப்போ, நிருவாக ஒழுங்கமைப்போ, தன்மானப் பிடிப்போ இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! எனவேதான், இயக்கங்கள் தோன்றுவதும், பிரிவதும், பிணைவதும், இணைவதும், ஒன்றுவதும் கேலிக்கூத்தாக நிகழ்கின்றன! இயக்கங்களில் பல்வேறுநிலைத் தலைவர்களும் பொருளாசை, புகழாசை, பதவியாசை, சாதிவெறி, மதவெறி, வட்டாரவெறி, ... முதலிய குறுகிய எல்லைகளுக்குள் இருந்தே செயல்படுபவர்களாக இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் முறையாகவும், நிறையாகவும், உண்மையாகவும், திண்மையாகவும் மொழியுணர்வோ, மொழிப்பற்றோ, நாட்டுணர்வோ, நாட்டுப்பற்றோ, இனவுணர்வோ, இனப்பற்றோ, ... உள்ளத்திலும், சிந்தையிலும் கொண்டு செயல்பட்ட தலைவர்கள் என்று குறிப்பிட்ட யாருமே தோன்றவில்லை. அதாவது, ஏறத்தாழ எல்லா தலைவர்களுமே தன்னல வெறியோடுதான் செயல்பட்டு வந்திருக்கிறார்கள். யாருமே உரத்தோடும், தீரத்தோடும், வீரத்தோடும் தொடர்ந்து மொழிக்காகவோ, இனத்துக்காகவோ, நாட்டுக்காகவோ போராடித் தங்களை அழித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

எனவேதான், இப்போது நாம் தத்துவ அடிப்படையில் தெளிவான செயல் சித்தாந்தத்தோடு, இலக்கியச் சான்றுகளோடு ஊன்றுகளோடு, வரலாற்றுப் பின்னணியோடு, பண்பாட்டுப் பாரம்பரிய உரிமையோடு, மதம் வழங்கும் பத்தி சத்தி சித்தி முத்திகளோடு .... பல ஆண்டுகள் செயல்பட்டும் கூட நாட்டிலுள்ள அனைத்துத் துறைத் தலைவர்களும் தமிழர்களாக இருந்தும் கூட நமக்குரிய அறிமுகங்களும், புரிமுகங்களும் நமக்குக் கிடைக்கவே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

அதாவது, நமது சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய தொழில் நிலைகளில் விளம்பரம் பெற்ற அனைத்துத் தலைவர்களுமே நமது வளர்ச்சி அவர்களைப் பாதித்து விடும் என்ற அச்சத்திலேயே இருக்கிறார்கள். எனவேதான் அவர்கள் நமது விரோதிகளோடு சேர்ந்து கொண்டு துரோகிகளாக வாழ்ந்து நம்மை இருட்டடிப்புச் செய்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், நமது இலக்கிய வாதிகளும், சமுதாய வாதிகளும், சமய வாதிகளும், அரசியல் வாதிகளும் கட்டுப்பாடாக பிறருக்கு அடிமைகளாக, கைக்கூலிகளாக,

கங்காணிகளாக, காவடிகளாக இருந்து நம்மை இருட்டடிப்பு செய்வதன் மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். இவர்களைத் திருத்தவே முடியாது. நமது அப்பாவி மக்களும் இவர்களை நம்பி ஏமாந்து இவர்களின் தொண்டர்களாகவே இருந்திடுகிறார்கள். எனவே, நமது வளர்ச்சி எளிதாக அமையப் போகின்ற ஒன்றல்ல.

நாம் உருவாக்குகின்ற செயல்வீரர்களின் தரத்தாலும், திரத்தாலும், தீரத்தாலும், உரத்தாலும், வீரத்தாலும், விவேகமிக்க உரையாடல்களாலும், அருள் வழங்குவதாலும்தான் நமது வளர்ச்சி நிதானமாகவும், அதே நேரத்தில் வளமாகவும், வலிமையாகவும் அமைய வேண்டும். இதற்காகத்தான் நமது செயல்வீரர்களை மிகமிகக் கடுமையாகக் கண்டித்து, விமரிசித்து, திருத்திச் செப்பனிட்டுச் செயல்படுமாறு செய்கின்றோம். அதாவது வைரத்தைச் சாணைக்கல்லில் தேய்த்துத்தான் பட்டை தீட்ட முடியும் என்பதற்கேற்ப; நம்மவர்களை அவர்களின் வருத்தங்களைப் பற்றிக் கவலைப்படாமல் மிகமிகக் கடுமையாகவும், சில சமயங்களில் மிகமிகக் கொடுமையாகவும் கூட விமரிசித்துத் திருத்திச் செயல்படுமாறு செய்ய வேண்டியிருக்கிறது. இது கசப்பான பாணியே என்றாலும்; தலைமைப் பீடத்தில் இருக்கிறோம் என்பதால்தான் மேற்கண்டவாறு கடின சித்தத்தோடு செயல்படுகிறோம் யாம்.

நம்மில் சிலர் எமது கடுமையான கண்டிப்புக்களால் பலர் நம்மை விட்டு விலகிச் சென்றிடுவார்கள் என்று பயப்படுகிறார்கள். இது பொருளற்ற, தேவையற்ற அச்சம். ஏனென்றால், எமது கண்டிப்பு வாசகங்களைக் கூட கடமையுணர்வோடு வாங்கி தாங்கித் திருத்திக் கொள்ள முடியாதவர்கள் வருங்காலத்தில் புரட்சிக் காலத்திலும், புரட்சிக் களத்திலும் என்ன செய்யப் போகிறார்கள்? எனவே, போகிறவர்கள் போகட்டும் என்பது போலத்தான் இருப்பவர்களை வைத்துச் செயல்பட வேண்டும் நாம்.

5) நமது அனைத்து வகையான செயல்நிலைகளுக்கும் அடிப்படையாக, ஆதரவாக, உள்ளீடாக, உயிரோட்டமாக இருக்கின்ற ஒன்றுதான் மொழியுணர்வு. இந்த மொழியுணர்வு இந்த உலகிலேயே தொன்மையான, பழம்பெரும் இலக்கியங்களை மிகுதியாகப் பெற்றிருக்கும் நமது மொழியின் மொழி வரலாற்றையும், இலக்கிய வரலாற்றையும், இலக்கிய வளத்தையும் விளக்கியுரைப்பதன் மூலம்தான் வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே, நாம் நமது இலக்கியங்களின் பெயர்களையும், இலக்கியக் கலைஞர்களான கவிஞர்களின் பெயர்களையும் .... மக்களுக்கு அடிக்கடி எடுத்துக் கூறி மொழியுணர்ச்சியை விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் பெறச் செய்ய வேண்டும். அதுதான் நமது வளவளர்ச்சிக்கும், வலிமைச் செயல் செழிச்சிக்கும் தேவையான வழிவகைகளைச் செய்திடும்.

ஆனால், தமிழ் படித்த ஆசிரியர்களிடமோ, தமிழ் படிக்கும் மாணவரிடமோ தமிழ் மொழியிடத்துப் பற்றோ, பாசமோ இல்லை. இதுதான் தமிழருக்கு இனப் பற்றோ, இன ஒற்றுமை உணர்வோ, மொழிப்பெருமை உணர்வோ, மொழியுரிமை உணர்வோ வளத்தோடும், வலிவோடும், பொலிவோடும் வளர்ச்சி பெற முடியாத நிலையை விளைவித்திருக்கிறது. எனவே, ஆசிரியர்களையும், மாணவர்களையும் மிகுதியாக நம்பாமல் உலகியல் வாழ்வில் உழன்று கொண்டிருக்கின்ற இளைஞர்களையும், நடுத்தர வயதினரையும் நம்பி அங்காடிகளிலும், சந்தைகளிலும், கோயில்களிலும், ஊர் விழாக்களிலும், குடும்ப விழாக்களிலும் சந்தித்து தமிழ்மொழி பற்றி, தமிழ் இலக்கிய வளம் பற்றி, தமிழ் தத்துவ வலிமை பற்றி, தமிழ்ச் சித்தாந்தப் பொலிவு பற்றி நிறையநிறைய எடுத்துக் கூற வேண்டும்.

இதற்கு நினைவாற்றலும், பேச்சுத் திறனும், யாம் எழுதிக் குவித்துள்ளவைகளில் ஆழ்ந்த அகன்ற படிப்பும் இருந்தால் போதும். அரிய, பெரிய அருட்சத்தியோ, சித்தியோ தேவையில்லை! தேவையில்லை! தேவையே இல்லை! நாட்டிலுள்ள அனைத்து வகையான இயக்கங்களின் மொழி, இன, நாட்டு துரோகப் போக்குகளையும், விரோதப் போக்குகளையும், தன்னலப் போக்குகளையும் வெளிப்படுத்தி விமரிசித்தேயாக வேண்டும். இதற்காக நாம் அவர்களைப் பற்றிக் கூறாமல் நமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல் திட்டங்களையும் புரிய வைத்தாலேயே போதும்! போதும்! போதும்! புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

6) நாம் நமது செயல்வீரர்கள், ஆதரவாளர்கள், பதிலிகள், நிறுவன நிர்வாகத் தொடர்புடையவர்கள் ... அனைவருமே கட்டாயமாக வாரம் ஒரு முறையாவது ஓர் அஞ்சலட்டையின் மூலமாவது தங்களின் உள நிலை, உடல் நிலை, கனவு நிலை, உலகியல் நிலை, அருளுலக அநுபவ நிலை, .... முதலியவைகளை விளக்கித் தலைமைப் பீடத்திற்கு அஞ்சல் அனுப்ப வேண்டும். இப்படி விடுக்கும் அஞ்சலில் “இந்த அஞ்சலையே பூசைக்கு வந்த மலராக ஏற்று தங்களையும், தங்கள் குடும்பத்தார்களையும், அருள் வழங்கிப் பாதுகாக்க வேண்டும்” - என்று வேண்டுகோள் வாசகம் எழுத வேண்டும் என்று குருவாணை பிறப்பித்துள்ளோம். ஏனெனில் அருள் வேண்டுபவர்களுக்கு உரிமையோடு உடனுக்குடன் உரிய அருளையும், பாதுகாப்பையும் வழங்குவதே பீடாதிபதிக்கு இயலும் என்பதால்தான்.

ஆனால், முசிறி க.பன்னீர்செல்வம், கு.ம.கணேசன், காட்டூர் நண்பர்கள், திருச்சி சந்திரசேகரன், தஞ்சை இராமர், கோவிலூர் மாரியப்பன், திருவையாறு நண்பர்கள், ... முதலியோர் வாராவாரம் அஞ்சல் எழுதுவதை தேவையற்ற ஒன்றாக, சர்வாதிகாரப் போக்குடைய

ஒன்றுகத் தவறுக எண்ணி இருந்து விடுகிறுர்கள். அவர்களுக்கெல்லாம் இந்த அஞ்சலின் நகலோடு தேவையான விளக்கங்களேயும் எழுதியனுப்புங்கள். யாம் அன்றுடம் நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்வதால் எம்மோடு அஞ்சல் தொடர்பு கொள்பவர்கள் பெரிய நன்மையை அடைவார்கள் என்று கூறுங்கள்.
- <u>குருவாணே</u>.

**தலைவர், குருதேவர், ஞானுச்சாரியார்,**
**இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
**22/08/85.**

//உண்மை நகல்//

//மூல நகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த அஞ்சலின் நகல்.//

# <u>கண்டிப்புக் குருவாணை</u>

..... ..... .....

4. நமது நாட்டில் நாம் அனைத்துத் துறைகளிலும் அன்னியர்களையே தலைவர்களாக, நம்பிக்கைக்குரியவர்களாக ஏற்றுப் போற்றி பணிந்து வாழும் அடிமைச் சிந்தையும், கூலி நெஞ்சும், கங்காணி உணர்வும், தாழ்வு மனப்பான்மையும், தன்னம்பிக்கையின்மையும் அடியோடு நீக்கப்பட்டேயாக வேண்டும். இவற்றைத் தெளிவாகப் புரிந்து கொண்ட நாம் முழுமையோடும், முறையோடும், நெறியோடும், நிறைவோடும், கட்டுப்பாட்டோடும், தலைமையை முழுமையாக ஏற்றுச் செயல்படும் வீரர்களைப் பெற்ற இயக்கமாகவே நமது இயக்கத்தவர்கள் அனைவரும் செயல்பட வேண்டும், வளர வேண்டும். எனவே, குருதேவர் விதிக்கும் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், கண்டிப்புக்களையும் அப்படியே ஏற்றுச் செயல்படுத்தும் பொறுப்பும், பொறுமையும், அறிவும், ஆற்றலும், திறமையும் பெற்று நம்மவர்கள் வளர வேண்டும். மேற்கூறப்பட்ட விதையின் மூலமாக <u>'அருளாட்சி'</u> என்ற அருங்கனியை நாம் அடைய ஒவ்வொரு தமிழனும், மனிதனும் உணர்ந்து செயல்பட வேண்டும். இதனை அனைவரும் உணர்ந்து, தெரிந்து, புரிந்து செயல்படுக.

..... ...... ......

//உண்மை நகல்//

// 30.07.1985இல் தலைமைப்பீடத்திலிருந்து எழுதப்பட்ட அஞ்சலின் இறுதிப் பத்தி. //

**"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**



**"... தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் வடஆரியர்களின் வேதமத மாயையிலிருந்தும், சமசுக்கிருத மொழியின் பிடியிலிருந்தும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் விடுவித்தால்தான் அருளாட்சி அமைக்க முடியும் என்று கண்டறிந்தார். இப் பேருண்மையினை விண்டுரைத்திட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களை உருவாக்கி காவல் தெய்வங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணியைச் செய்திட்டார் ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com